THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## மார்ச் 2021(மடல் - 21) செய்தி-3

"நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும். என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே. நீரே என் கன்மலையும், என் கோட்டையுமாய் இருக்கிறீர்."

- சங்கீதம் 71:3

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 9 |
| Children's Corner | 14 |
| Youth Corner | 25 |
| வேத வினாக்கள் | 27 |
| கோதுமை மணி | 30 |
| துணுக்குகள் | 32 |
| ஆலய பக்கம் | 35 |

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரிலே அன்போடு கூட வாழ்த்தி வரவேற்கிறேன். இந்த 2021-ம் ஆண்டிலும் மூன்றாவது மாதத்தை காணச்செய்த ஆண்டவருக்கு நாம் நன்றி செலுத்துவோம்.

**"நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும். என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே. நீரே என் கன்மலையும், என் கோட்டையுமாய் இருக்கிறீர்" (சங்கீதம் 71:3).**

இஸ்ரயேலரும் பாலஸ்தீனாவில் எதிரிகள் தாக்குவதற்கரிய நகரங்களை கற்பாறையின் மேல் கட்டினார்கள் என்ற செய்தி நமக்கு கிடைக்கிறது. மற்றும் பழைய ஏற்பாட்டில் மோசேயைக் குறித்து அறிந்து கொள்ளும்பொழுது கடவுளை கற்பாறை என்று உருவகப்படுத்திக் கொண்டார். காரணம் அதன் அசையாத தன்மை. அதே போல தாவீதும் சங்கீதங்களிலே ஆண்டவரை அரணான கற்பாறை என்று, தன்னை பாதுகாக்கும் கடவுளாக காண்கின்றார்.

இந்த மாதத்திலும் கற்பாறையாகிய ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்கும்படி அவருடைய தன்மைகளை நாம் காண்போம்.

**1. நிலைத்திருக்கும் தன்மை உடையது:**

கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். கத்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார் (ஏசாயா 26:4). நம் ஆண்டவர் நம்மை காக்கின்ற கற்பாறையாக என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார். அவர் மாறாதவர். அவர் நம்பபடத்தக்கவர். துன்பத்தில் தம்மை நம்பினோரை கைவிடாமல் பாதுகாக்கின்ற கடவுள். நிலைத்திருக்கும் கற்பாறையின் மீது நம்பிக்கை வைப்போம்.

**2. உயர்த்தும் ஆற்றல் உடையது:**

தீங்கு நாளில் அவர் என்னை தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னை தம்முடைய கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னை கன்மலையின்மேல் உயர்த்துவார் (சங்.27:5). நமக்கு தீங்கு வரும்போது ஆண்டவரை முழுமையாக நம்பினால் அவர் நம்பிக்கையின் கற்பாறையாக நம்மை காப்பாற்றுவார். அன்னாள்

பிள்ளைபேற்றிற்காக கடவுளிடத்தில் ஜெபிக்கும்பொழுது அன்னாளின் ஜெபத்தை ஏற்று கடவுள் ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். தொடர்ந்து 1சாமு.2:8-ஐ படிக்கும்பொழுது அவர் சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். ஆகவே நாமும் நம்மை அர்ப்பணித்து ஜெபிக்கும்போது உயர்த்துகின்ற ஆண்டவர் நம்மையும் பாதுகாத்து உயர்த்துவார்.

**3. அடைக்கலமான ஆண்டவர்:**

கற்பாறையான கடவுள் தம்மை தேடி வருபவர்களுக்கு புகலிடம் கொடுக்கின்றார். என்னிடத்தில் வருவோரை புறம்பே தள்ளுவதில்லை என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார். பேதுரு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் கூடவே ஊழியம் செய்து அவரை மறுதலிக்கின்றார். ஆனாலும் ஆண்டவர், பேதுருவையும் ஏற்றுக்கொண்டு இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என்று தமது வாக்கின்படி தமது திட்டத்தை நிறைவேற்றினார்.

இந்த புதிய மாதத்திலும் ஆண்டவர் நம் கன்மலையாக, கோட்டையாக, அரணாக இருந்து நம்மை பாதுகாத்து, நமக்கு புகலிடம் தந்து நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவாராக.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
*அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.* C

## அழகு பெண்ணே உனக்காக......



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த இரண்டு மாதங்களை முடித்து புதிய மாதத்தை காணச் செய்த நம் ஆண்டவருக்கு நாம் குடும்பமாக நன்றி செலுத்துவோம்.

நம் ஆண்டவரின் உன்னத படைப்பான நம் கண்களை குறித்து அநேக காரியங்களை நாம் கடந்த மாதத்தில் திருமறையின் அடிப்படையில் சிந்தித்தோம் அல்லவா? அதன் தொடர்ச்சியாக இந்த மாதமும் சில காரியங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அழகுக் கண்கள் பெற வேதம் தரும் ஆலோசனையில்

1. ***நேராய் நோக்க வேண்டும்.***
2. ***கலிக்கம் போட வேண்டும்.***

அடுத்தபடியாக, இந்த மாதம் சிந்திக்க இருப்பது,

***3. புறாக்கண்கள்***

சங்கீதக்காரன் கூறும்பொழுது துயரத்தினால் என் கண்கள் குழிவிழுந்து போயிற்று. என் கண்கள் அழுது, கண்ணீரால் குழி விழுந்த அனுபவத்தை கூறுகின்றார்.

"ஆ என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்" எரேமியா 9:1.

எரேமியா தீர்க்கதரிசியோ, தன் கண்கள் கண்ணீர் ஊற்றாகட்டும் என்றார். அப்படியென்றால் என்ன?

ஆம் பிரியமானவர்களே போராடி அழுது ஜெபித்து தன் கண்ணீரால் கண்கள் ஊற்றாகட்டும் என்கிறார்.

நமது கண்களும் இதே போன்று, நான் நம் பிள்ளைகளுக்காக, அவரகளுடைய ஆசீர்வாதத்திற்காக, வேலைப் பளுவில் இருக்கும் கணவனுக்காக, பிறந்த வீட்டிற்காக, புகுந்த வீட்டிற்காக, நம்மை புரிந்துகொள்ளாத உறவுகளுக்காக கண்ணீர் விட்டு அனுதினமும் ஜெபிக்க வேண்டும். அவ்வாறு ஜெபநேரத்தில் நம்

கண்கள் ஊற்றாக மாறும் போது, நம் கண்கள் புறாக்கண்களாய் மாறி மேலும் அழகு சேர்க்கும்.

### *4. விழித்திருக்கும் கண்கள்*

"உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்பாக என் கண்கள் விழித்துக்கொள்ளும்" சங், 119:148.

குணசாலியான ஸ்திரீயின் அநேக குணநலன்களை நீதி. 31-வது அதிகாரத்தில் தியானித்து இருக்கிறோம். அதில் குறிப்பாக 15-வது வசனத்தில் இருட்டோடே எழுந்திருப்பவள் என்று வாசிக்கிறோம். நாம் குறித்த ஜாமங்களுக்கு முன் விழிக்கும் அனுபவம் பெற்றுள்ளோமா? குணசாலியான பெண்ணும் பின் தூங்கி, முன் எழுபவள் தான். நம் முதல் பார்வை இயேசுவின் மீதும், இயேசுவின் வார்த்தை மீதும் வைக்கும்படி வேதத்தை தியானிக்க விழிக்க வேண்டும். உலகப்பிரகாரமாக ஆயிரம் வேலைகள் இருக்கலாம். கர்த்தருக்குரிய நேரத்தை கர்த்தருக்கு கொடுக்க விழிப்பாய் இருக்க வேண்டும். அப்படி செய்யும் போது, கண்களில் கருவளையம் அல்ல, கிறிஸ்துவின் மகிமை மிளிரும். பேரழகியாகலாம்.

இயேசுவின் அழகான கண்கள் கண்டதாலே முடிந்ததென்று நினைத்த நாம் உயிர் வாழ்கிறோம்! அடுத்த மாதம் நம் வாயின் அழகை குறித்து தொடர்ந்து தியானிக்கலாம். ஆண்டவர் தாமே இம்மாதம் முழுவதும் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வாதிப்பாராக!

**- தொடரும்**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
***திருமதி. ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

# ஆண்கள் பகுதி

## தாழ்த்தி ஜெபம் பண்ணி....!!(Humble themselves, and pray,.....!!)

*சாலொமோன், மகா உன்னதமான ஆலயத்தை தேவனுக்கென்று கட்டி ஜெபித்த பொழுது கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று (2 நாளா 7:1). தேவன் அதை ஆலயமாகத் தெரிந்துக்கொண்டேன் என்று அங்கீகரித்தப் பினபு, கர்த்தர் சாலொமோனுக்கு இரவிலே தரிசனமாகி, தேசத்தை அழிக்கும்படிக்குத் தாம் வானத்தை அடைத்து, வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது*

*கொள்ளைநோயை அனுப்பும்போது, "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்" என்று வாக்குப்பண்ணினார்.*

### ஏன் அழிவுகள் ?

*முதலாவதாக, ஏன் தேசங்களில் அழிவுகள் வருகின்றன என்பதை தேவ பிள்ளைகளாகிய நாம் வேதத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுக்கு கீழ்ப்படியாமையும், ஜனங்களின் பாவங்களும் தேவ கோபத்தை உண்டுபண்ணுகின்றன (2 நாளா 34:25, சங் 78:17) என்பதை வேதத்திலே நாம் பார்க்கிறோம். தேவனுடைய சித்தமில்லாமல் தலையில் இருக்கக் கூடிய ஒரு முடியாவது கீழே விழாது என்று வேதம் நமக்கு வெளிப்படுத்துகிற அதே வேளையில், இந்த கொள்ளை நோய் உலகமெங்கும் பரம்புகிறது என்றால் அதன் காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகம் கொரோனோ என்ற கொள்ளை நோயை பலவிதமாக புரிந்து கொண்டாலும், நம்மை பொறுத்தவரை அது தேவனுடைய எச்சரிப்பு. சாலொமோனுக்கு தரிசனத்தில் பேசிய பரலோக தகப்பனின் வார்த்தைகளை இப்படி நாம் புரிந்து கொள்ளலாம். என் ஜனங்களுக்கு என் நாமம் தரித்தேன்! அவர்களை என்னுடையவர்களாக்கினேன்! அவர்கள் தங்களைத் தாழ்த்தவில்லை! ஜெபம் பண்ணி என்னோடு உறவாடவில்லை! தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பவில்லை! அவர்கள் தங்கள் பாவத்தில் வாழ்கிறார்கள்…!*

### எப்படி தேட வேண்டும்..?

*இந்த மாதிரி நேரங்களில் தேவ வார்த்தை நமக்கு அறிவுறுத்துகிற பிரகாரம், நாம் நம்மை தாழ்த்தி ஜெபம் பண்ணி தேவனை தேடி பொல்லாத வழிகளை திரும்ப வேண்டும். அப்போது தேவன் நம்முடைய தேசத்திற்கு ஆரோக்கியத்தை கட்டளையிடுவார். கொள்ளை நோய் ஏற்படும் காலமானது, ஜனங்கள் "தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடுவதற்கு" ஒரு திட்டவட்டமான வாய்ப்பை அளிக்கிறது என்று தேவன் கூறுகிறார் (2 நாளா. 7:14) "சமாதானத்தின் தேவன்" (1 தெச. 5:23) வானத்தில் மட்டும் இருக்க விரும்பவில்லை, மாறாக, அவர் நம்மால் கண்டுபிடிக்கப்படவும், நமக்கு சமாதானமாக இருக்கவும் விரும்புகிறார்.*

*இயேசு நம்மிடம், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று கூறுகிறார். (யோவான் 14:1) நாம் கலக்கமடைய வேண்டியதில்லை. நாம் மனஉளைச்சலிலும் பயத்திலும் வாழ வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டுவது இது தான் (1). நாம் நம் பொல்லாத வழிகளை விட்டு திரும்பி (2). நம் தேவன் முகத்தைத் தேடி, ஜெபித்து (3). நாம் நம்மை தாழ்த்தினால் நமக்கு பதில் இப்படியாக வரும். நம் வேண்டுதலை பரலோகத்தில் இருக்கும் தேவன் கேட்ப்பார், நாம் உணர்ந்து தாழ்த்தினதை பார்த்து, மன்னிப்பார். அப்பொழுது, நம் தேசத்திற்கு சுகம் கிடைக்கும். நாம் மகிழ்ச்சி அடைவது நிச்சயம்.*

***<u>தாழ்மையின் ஜெபம்</u>***

*பரிசேயன், ஆயகாரன் இருவருமே ஜெபித்தார்கள். அதுவும் ஜெப ஆலயத்தில் ஜெபித்தார்கள். ஆனால் ஒருவனின் ஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டது, மற்றொருவனின் ஜெபம் புறக்கணிக்கப்பட்டது. பரிசேயன் ஜெபித்தான், ஆனால் அவன் சுயபெருமை நிரம்பினவனாய் ஜெபித்தான், அவனுடைய ஜெபம் கேட்கப்படவில்லை. ஆனால் ஆயக்காரன் தன்னைத் தாழ்த்தி, "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்தான். அவனுடைய ஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாழ்த்தி ஜெபிப்பதே மெய்யான ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.*

*இன்று, பாவத்திற்குள் கிடக்கும் நமது தேசத்துக்காய் ஜெபிக்க நாமேதான் கடமைப்பட்டிருக்கிறோம். நம்மில் எத்தனை பேருக்கு தேசத்துக்காய் ஜெபிக்கும் பாரம் உண்டு! நம் தேசத்துக்கு ஷேமம் வேண்டுமாயின் முதலாவது, நாம் நம்மை தாழ்த்தவேண்டும். தாழ்மையான ஜெபமே தேவசமுகத்தை அசைக்கும். இப்படிப்பட்ட ஜெபத்தை நம்மாலேதான் செய்யமுடியும். அழிவை நோக்கி வெகுவேகமாகச் சென்று கொண்டிருக்கும் நமது தேசம் பாவக்கட்டுக்குள் அகப்பட்டு இன்னமும் மெய்த் தேவனை அறியாமல் அன்றாடம் செத்து மடிந்துகொண்டிருக்கும் நமது மக்கள், இவற்றைக்குறித்து நாம் பாரமற்றிருப்பது எப்படி? நாம் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும் (1தீமோ.2:1,2).*

*பாஸ்டர். பால்யாங்கிசோ, கொரியா தேசத்தை சேர்ந்தவர்கள் 10 இலட்சம் அங்கத்தினர்களை கொண்ட சபையை உருவாக்கினவர்கள், கொரிய தேச எழுப்புதலில் பெரிய பங்கை பெற்றவர்கள், எப்படி தென் கொரியாவில் இந்த எழுப்புதல் ஏற்பட்டது என்று அவரிடம் கேட்டபோது, அவர் பகிர்ந்து கொண்ட காரியம், அவர்கள் சபையில் உள்ள சாதாரணமான விசுவாசிகளும், சிறுகுழந்தைகளும் தினமும் ஒரு மணி நேரம் ஜெபிப்பார்களாம். மட்டுமல்லாமல், அவர்கள் சபையில் உள்ள உதவி பாஸ்டர்கள் 800 பேர் தினமும் மூன்று மணி நேரம் ஜெபிப்பார்களாம். தலைமை போதகரான பால்யாங்கிசோ அவர்கள் தினமும் ஏழு மணி நேரம் ஜெபிப்பார்களாம்.*

நம்முடைய ஜெப நேரம் எப்படி இருக்கிறது ? நம்முடைய ஜெபம் எப்படிப்பட்டதாக இருக்கிறது.? இந்த லெந்து நாட்கள் நம் ஜெப வாழ்வை சுய பரிசோதனை செய்து கொள்ளும் காலங்களாக கிருபையாய் நமக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. நம்மை ஆராய்ந்து, தேவ வார்த்தையின் படி நம்மை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து, நம் ஜெப வேளையை அதிகமாக்கி திறப்பிலே நிற்க நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் தாமே தம்முடைய வாக்குத்தத்தின் படி, நம்மையுடைய ஜெபங்களை கிருபையை கேட்டு தேசத்திற்கும், அவர் ஜனங்களாகிய நமக்கும் க்ஷேமத்தைக் கட்டளை இடுவாராக, ஆமென்.

*ஆவியோடும் கருத்தோடும் ஜெபம் பண்ணுவோம் ..*
*அதிகாலை வேளையிலும் ஜெபம் பண்ணுவோம் ...*
*சோதனையில் விழித்திருந்தே ஜெபம் பண்ணுவோம் ..*
*சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணுவோம் ...!!! (1கொரி 14 :15, மத் 26:41)*

*அந்தரங்கமாய் நீயோ அறைவீட்டில் ஜெபித்திடு ...*
*அஞ்ஞான வார்த்தைகள் அலப்பாமல் ஜெபித்திடு ...!*
*ஒருவர் குறையை ஒருவர் மன்னித்து ஜெபித்திடு ...*
*ஒருவர் பாரம் ஒருவர் மனதிலேற்றி ஜெபித்திடு ...!! (மத் 6:6,7, கலா 6:2)*

*விசுவாச ஜெபம் பிணிகள் நீங்க இரட்சிக்கும்*
*விழித்தே செய்யும் ஜெபம் சோதனையை பட்சிக்கும்..*
*திறப்பிலே நிற்கும் ஜெபம் தேசத்தை க்ஷேமிக்கும்..!*
*உபவாச ஜெபம் நம்மை உன்னதரோடு இணைக்கும்..!! (யாக் 5:15, மத் 26:41, 2 நாளா. 7:14)*

*கடைசி காலமிது காத்திருந்தே ஜெபிப்போம் ..!!*
*கல்வாரி பாடுகளை பார்த்தறிந்தே ஜெபிப்போம் ...!*
*கடைசி மூச்சு வரை ஜெபித்து முடித்த கர்த்தர் ..*
*திரும்ப வருமளவும் தரித்திருப்போம் ஜெபத்தில் ...!!! (மாற் 13: 33, 1பேதுரு 4 :7)*

கிறிஸ்துவில் அன்புடன்
**ஜெய சந்திர ராஜா**

# பெண்கள் பகுதி

## ஜெப வீரனான எலியா

**எலியாவைக் குறித்து .......**



பழைய ஏற்பாட்டில் தனி சிறப்போடு நிற்கும் தீர்க்கதரிசி, எலியா. புதிய ஏற்பாட்டிலும் கூட முப்பது தடவைகளுக்கு மேலாக இவரைக் குறித்து கூறப்பட்டுள்ளது. மறுரூப மலையில் மோசேயோடு கூட தோன்றியவர். தனது காலத்திலிருந்த மன்னன் ஆகாப் மீதும், தேசத்தின் மீதும் அக்கினியால் தீர்ப்பளித்த எலியா, அக்கினி இரதத்தில் தேவனிடம் எடுத்துக் கொள்ளப்பட்டார் (1ராஜா.2:11). இயேசுகிறிஸ்துவும், யோவான் ஸ்நானகனும் மீண்டும் வந்த எலியாக்களாக கருதப்பட்டனர்.

**இந்த எலியாவின் வாழ்வில் குறிப்பிடத்தக்க முக்கியமான ஜெபங்கள் நான்கு**

- மழை வேண்டாமென்று ஏறெடுத்த ஜெபம் (யாக். 5:17).
- விதவையின் மரித்துப் போன மகனுக்காக ஏறெடுத்த ஜெபம் (1ராஜா.17:19-24).
- வானத்திலிருந்து அக்கினி அனுப்பவேண்டி ஏறெடுத்த ஜெபம் (1ராஜா.18:36-38).
- மழை மீண்டும் பெய்வதற்காக ஏறெடுத்த ஜெபம் (1ராஜா.18:41-46).



மேலே காணும் நான்கு ஜெபங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட, ஒரு மனிதனால் செய்யக் கூடாத காரியங்களை நிறைவேற்ற எலியாவால் ஏறெடுக்கப்பட்டதாகும். எலியா நம்மைப் போல் ஒரு பாடுள்ள மனிதனாய் இருந்தாலும் தேவனுக்கு முன்பாக நிற்கும் பழக்கம் உள்ளவராக இருந்தார். அவருக்கும் தேவனுக்கும் உள்ள ஐக்கியம் மிகவும் உறுதியாக இருந்ததினிமித்தமே எலியாவால் இத்தகைய இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை சாதிக்க முடியாது.

**எலியாவின் ஜெபத்தின் மூலம் காணக்கூடிய குணாதிசயங்கள்:**

- நடக்கக்கூடாததை நடக்குமாறு கர்த்தரிடத்தில் கேட்பதில் மகிழ்ச்சி கண்டார்.
- எதற்காக ஜெபிக்கிறோமோ அதை பெற்றுக்கொள்வோம் என்று நம்பினார்.
- விடாமுயற்சியோடு கருத்தோடு ஜெபித்தார்.

தான் ஆராதிக்கும் ஆண்டவர் உயிருள்ளவர், ஜெபத்திற்கு பதில் தருபவர், சர்வத்தையும் ஆளுகிறார் என்பதை உறுதியாக நம்பின விசுவாசமே எலியாவை ஆகாப் முன்பாகவும் பாகால் தீர்க்கதரிசிகள் முன்பாகவும் தைரியமாக நிற்க வைத்தது. அவர் எதற்கும் அஞ்சியதாக தெரியவில்லை. அவருடைய விசுவாசத்தை கனப்படுத்திய தேவன் அக்கினி மூலம் பதில் கொடுத்தார். நாம் அப்பகுதியை வேதத்தில் வாசிக்கும் போது நம்மை மெய் சிலிர்க்க வைக்கக் கூடிய பகுதி அது!

உலகத்திலிருக்கிறவனைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர் பெரியவர் என்ற எண்ணம் நம்மோடு இருந்தால் நாம் ஒருபோதும் கலங்க மாட்டோம். நம்மை எதிர்ப்பவர்கள் யாராய் இருந்தாலும் நாம் மேற்கொள்வோம். நமக்கு விசுவாசமும் ஜெப வாழ்க்கையும் இருந்தால், நாமும் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியிலும் தேவ வல்லமையை காண முடியும்.

**எலியாவின் மறுபக்கம்**



வியத்தகு காரியங்களை ஜெபத்தின் மூலம் சாதித்த எலியா, ஒரு கட்டத்தில் யேசபேலுக்கு பயந்து, சோர்வுற்று என் ஜீவனை எடுத்துக்கொள்ளும் என்று ஆண்டவரிடம் கேட்கிறார். அப்போது தேவன், தமது தூதன் மூலம் எலியாவைப் பலப்படுத்துகிறார். தேவதூதன் கொடுத்த போஜனத்தால் ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் நாற்பது நாள் இரவு பகல் நடந்து சென்றான்.

தேவ பர்வதம் கொண்டு வரப்பட்ட எலியா, தேவனிடம் ஆலோசனை கேட்பதற்கு பதிலாக, யேசபேலின் மிரட்டலுக்கு பயந்து கெபிக்குள் சென்று ஒளிந்து கொள்கிறான். அப்போது தேவன், பர்வதத்தில் அவனை நிறுத்தி, அமர்ந்த மெல்லிய சத்தம் மூலம் பேசுகிறார். "எலியாவே உங்கே உனக்கு என்ன காரியம்" என்று கூறி அவர் செய்ய வேண்டிய காரியங்களை சொல்லிவிட்டு செல்கிறார் தேவன். எலியாவும் கீழ்ப்படிந்தார் (1ராஜா.19:9-20).

இது நமக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்பிக்கிறது. ஜெபத்தில் உறுதியாய் தரித்திருந்தாலும், சிலவேளை சோர்வு நம் வாழ்க்கையில் ஏற்படலாம். ஆனால் நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு சரியாக இருந்தால், நம் தேவன் நம்மை தாங்குவார். தம் தூதர் மூலம் நம்மை பெலப்படுத்துவார். நாம் அவரைத் தேடிச் செல்லாவிட்டாலும், நம்மைத் தேடி வருகிறவர் நம் தேவன்.

எனவே சோர்ந்து போகாமல், அசதியாய் இராமல், விழிப்புடன் ஜெபத்தில் நாம் எப்போதும் உறுதியாய் தரித்திருக்கக் கடவோம். கர்த்தருக்கு முன்பாக அவருடைய பர்வதத்தில் எப்போதும் நிற்க பழகிக் கொள்வோம். அப்போது நாம் இந்த உலகில் ஆண்டவருக்காக அநேக காரியங்களை சாதிக்க முடியும். இன்றைய உலக சூழலில், ஆண்டவரின் திட்டத்தை நிறைவேற்ற, அநேக ஜெபிக்கின்ற எலியாக்கள் தேவை.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### பெண் தீர்க்கதரிசினி - அன்னாள்

ஜெபம் என்பது கிறிஸ்தவ மக்களுடைய வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்று. "மூளை செய்ய முடியாததை, முழங்கால் செய்யும்" என்று சொல்வார்கள். ஜெபத்தின் மூலம் நாமும் அநேக ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறோம். உத்தம விதவையாய் இருந்து தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவளாய் இரவும், பகலும், வேண்டுதலிலும் ஜெபங்களிலும் நிலைத்திருந்த ஒரு பெண்மணி அன்னாள். இந்த அன்னாளைக் குறித்து 2:36-38-ம் வசனத்தில் பார்க்கிறோம்.

அன்னாள் ஆசேருடைய கோத்திரத்தைச் சேர்ந்தவள். பானுவேலின் குமாரத்தி ஒரு தீர்க்கதரிசினி, அன்னாள் என்பதற்கு தேவனுடைய கிருபை என்று பொருள். திருமண வாழ்க்கையில் ஏழு ஆண்டுகள் மட்டுமே கணவனோடு வாழ்ந்தவள். வாலிப வயதிலே விதவையானவள். இவள் கணவன், மற்றும் பிள்ளைகள் குறித்து சொல்லப்படவில்லை. இந்த அன்னாள் தேவாலயத்தை விட்டு விலகாமல் இரவும், பகலும், ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என்று தேவாலயத்தில் தங்கியிருந்து ஆலயத்தின் எல்லா காரியங்களிலும் பங்கு பெற்றிருந்திருப்பாள் என்று நம்ப தோன்றுகிறது. வாழ்வின் அநேக சந்தோஷங்களை இழந்தாலும், தேவ பிரசன்னத்தை இழக்கவில்லை. தேவ பிரசன்னம் அவளுக்கு போதுமானதாக இருந்தது.

அன்னாளிடமிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால், 84 வயது நிரம்பினவளாக இருந்தாலும், உபவாசம் இருந்து ஜெபிக்கிற மகளாய் காணப்பட்டாள். அநேகர் சுய நலத்திற்காக, பேர் புகழுக்காக, பொருளாசைக்காக நீண்ட ஜெபங்களை ஏறெடுத்த போதிலும், இந்த அன்னாள் தேவனால் வரும் கனத்திற்காக ஜெபத்தோடும், உபவாசத்தோடும் தேவனைச் சேவித்தாள் என்று பார்க்கிறோம்.

### தேவனைப் புகழ்ந்து நன்றி கூறுகிற மகளாக காணப்பட்டாள்

நாம் அநேக நேரங்களில் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் ஏறெடுக்கிறவர்களாய் இருக்கிறோம். ஆனால் துதியும், புகழும், நன்றியும் ஏறெடுக்க மறந்து விடுகிறோம். அவர் கொடுத்த ஒவ்வொரு நன்மைக்கும், ஆசீர்வாதத்திற்கும் நன்றி சொல்லி நன்றியாய் வாழ வேண்டும். கிடைக்காத

காரியத்தை எண்ணி முறுமுறுத்து சோர்ந்து போகாமல் கிடைத்தவற்றிற்கு நன்றிச் சொல்லி உண்மையாய் இருக்க வேண்டும். இந்த அன்னாள் உண்மையாய் இருந்ததினால் இரட்சகரை பார்க்கும் பாக்கியம் பெற்றாள். பார்த்தது மாத்திரம் அல்ல, எருசலேமில் மீட்பு வர வாஞ்சையோடும், நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் மேசியா வருவார் என்று ஆவலோடே காத்துக்கொண்டிருந்த யாவருக்கும் பாலகன் இயேசுவைக் கண்டதையும், வரவேண்டிய மேசியா இவர்தான் என்றும் பறைசாற்றினாள். மேசியா மூலம் தான் இரட்சிப்பு என்பதையும் திட்டமாய் அறிவித்தாள். அந்நாள் தன் வாழ்நாளை வீணாக்காமல் வாழ்க்கையின் பெரும் பகுதியை நித்திய நிரந்தர வாழ்க்கைக்காக வாழ்ந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தினாள். அன்னாளைப் போல தேவ பிரசன்னத்தில் தரித்திருப்போம். உபவாசமும் ஜெபமுமுள்ள வாழ்க்கை வாழுவோம். ஆராதனை செய்து ஆண்டவரை மகிமைப்படுத்துவோ. மேசியா இயேசு மூலமே இரட்சிப்பு என்று பறை சாற்றுவோம். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ தேவன்தாமே நமக்கு உதவி செய்வாராக!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## ஏப்ரல் மாத தலைப்பு

## கடவுளின் வார்த்தையை மதித்து நடத்தல்

## RESPECT FOR GOD'S WORD

# ஜெபம்

ஜெபம் என்பது தேவன் நமக்குத் தந்த மகத்தான ஈவு. ஜெபத்தின் மூலமாக நாம் தேவனோடு ஐக்கியப்படலாம்.

ஜெபத்தின் வழியாகவே பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு போன்றோர் வேதாகமமின்றி தேவனோடு ஐக்கியமாயிருந்தனர். ஜெபம் நம்மைப் பக்குவப்படுத்தும் (Prayer will mould us). நம்மை மனதுருக்கமுடையவராய் மாற்றும் (Fills us with compassion).

ஜெபத்திற்கு நமக்கு நிகரில்லாத முன் உதாரணம் வைத்து போயிருப்பவர் இயேசு கிறிஸ்துவே (Our greatest role model for prayer is Jesus himself).

**இயேசுவானவர் தன் தகப்பனை நோக்கி விண்ணப்பிக்கிறார்(Prayed to His father)**

லூக்கா 11:2, யோவான் 11:41,42, 12:27,28 ஆகிய வசனங்களில் அவர் பிதாவை உறுதியாய் பற்றிப் பிடித்து ஜெபிப்பதைக் காண்கிறோம்.

அதுபோன்று நாமும் பிதாவோடு அவருடைய புத்திரர்களாக நம்மை நமது ஜெபத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். பிதாவின் குணாதிசயங்களை நாமும் ஜெபத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தனிமையில் / அந்தரங்கத்தில் ஜெபித்தார் (He prayed alone and in secret)**

லூக்கா 5:16, மத்தேயு 1:35 ஆகிய வசனங்களில் அவர் எல்லாவற்றிலுமிருந்து விலகி தனியே ஜெபித்தார் என்று நாம் வாசிக்கிறோம் (went out to a mountainside to pray). மத்தேயு 6:6-ல் அவர் ஜெபிக்க கற்றுக்கொடுக்கும் வேளையில் மேலறையில் போய் கதவைப் பூட்டி.... என்று கூறுவதைக் காணலாம்.

இன்று நாமும் ஜெபிப்பதற்கு நமது கைபேசி (mobile), தொலைக்காட்சி பெட்டி போன்றவை இல்லாது, ஆண்டவரின் பாதத்தில் தனித்து அமர அழைக்கப்படுகிறோம்.

**முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும் முன்னர் இயேசு ஜெபித்தார் (Jesus prayed for directions)**

மாற்கு 3:13-19, லூக்கா 6:12-19, மத்தேயு 26:36 - ஆகிய வசனங்களில் சீஷர்களை தேர்ந்தெடுப்பது, தம்மைத்தாமே சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பது போன்ற முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் முன்னர் இயேசு ஜெபித்தார்.

இப்படி முன்மாதிரி வைத்து சென்றிருக்கும் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நாமும் ஜெபிப்பதை நமது அன்றாட வாழ்க்கையாகக் கொண்டு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ தேவன் கிருபை அளிப்பாராக.

**ஜெசி விஜய் ஆனந்த்**

# CHILDREN'S CORNER

Dear Children,

Greetings!!

Hope you all had a blessed month of February.

As the new month of March dawns, it must be especially stressful with final exams at the doorstep. Most of you will be taking your final exams online, while some will be going to school for offline exams.

It is timely then, that the theme for this month is "Prayer".

Are you anxious about the exams? Don't be... The Bible tells us in Philippians 4:6 – "Do not be anxious about anything, but in every situation, by **prayer** and petition, with thanksgiving, present your requests to God."

Do you think that you lack wisdom? The bible tells us in James 1:5 - If any of you lacks wisdom, you should **ask** God, who gives generously to all without finding fault, and it will be given to you."

And most importantly, are you thinking about what the new academic year will bring? The Bible instructs us in Proverbs 3:5-6 - **Trust** in the Lord with all your heart, and lean not on your own understanding; in all your ways submit to him, and he will make your paths straight.

But...how should you pray? The Lord's prayer, given to us by Jesus himself, gives us a great framework for when we want to talk with God but don't know the right words to say.

*Our Father in heaven, hallowed be thy name.* - A greeting in which the name of the Lord is **PRAISED.**
*Thy kingdom come.*
*Thy will be done, on earth as it is in heaven* - Remember that He is in control and give Him **THANKS.**
*Give us this day our daily bread* - **ASK** for your daily needs.
*Forgive us our debts,*
*As we also forgive our debtors* - **CONFESS** your sins.
*And lead us not into temptation,*
*But deliver us from evil* - pray that God delivers you and **OTHERS** from all evil



## THE BOOK OF PROVERBS

King Solomon could have asked God for anything, but he asked God for the gift of wisdom. He shares this wisdom with us in the Book of Proverbs.




The book of proverbs is a very practical book, written thousands of years ago, but it still helps people with their lives today.

Have you ever met someone who doesn't live their life with wisdom? They probably make a lot of bad decisions!

But, anyone who knows Jesus can actually live the Proverbs.

Because they're the ones who can obey the proverbs!

It's one thing to know what's right to do. It's another thing to actually do it!

Christian kids have someone who helps them to obey and follow God - the Holy Spirit!

The Holy Spirit helps keep us strong when we run into difficult situations, and helps us make wise decisions.

**SOME GEMS FROM THE BOOK OF PROVERBS**

There are many treasures to be gleaned from studying the book of Proverbs. The below serve to illustrate a few…




and if you look for it as for silver and search for it as for hidden treasure, then you will understand the fear of the LORD and find the knowledge of God. - Proverbs 2:4-5 NIV




Trust in the LORD with all your heart and lean not on your own understanding; in all your ways acknowledge him, and he will make your paths straight. — Proverbs 3:5-6 NIV

**CHOOSE THE CORRECT OPTION – BOOK OF PROVERBS**

1. What word finishes Proverbs 1:7 (KJV), "The fear of the Lord is the beginning of _______: but fools despise wisdom and instruction"?
   a. Love  b. knowledge  c. Thoughtfulness  d. discipline

2. What word completes Proverbs 3:5 (KJV), "Trust in the Lord with all thine heart; and lean not unto thine own ________________"?
   a. Understanding  b. thoughts  c. Knowledge  d. beliefs

3. Can you complete this line from Proverbs 6:4 (KJV), "Give not sleep to thine eyes, nor ____________ to thine eyelids"?
   a. Slumber  b. dreams  c. Sleep  d. rest

4. What word finishes Proverbs 8:11 (KJV), "For wisdom is better than ______; and all the things ......are not to be compared to it"?
   a. Rubies  b. silver  c. Gold  d. diamonds

5. What word completes Proverbs 9:6 (KJV), "Forsake the ____________, and live; and go in the way of understanding"?
   a. Heartlessness  b. dirty  c. Foolish  d. wealthy

6. What word finishes Proverbs 11:22 (KJV), "As a jewel of gold in a ___________ snout, so is a fair woman which is without discretion"?
   a. hog's  b. dog's  c.swine's  d. sow's

7. What word completes Proverbs 12:15 (KJV), "The way of a fool is right in his own ___: but he that hearkeneth unto counsel is wise"?
   a. belief  b. sight  c. eyes  d. mind

8. What word completes Proverbs 14:34 (KJV), "Righteousness exalteth a____________: but sin is a reproach to any people"?
   a. country  b. nation  c. city  d. building

9. Can you complete Proverbs 15:29 (KJV), "The ___________ is far from the wicked: but he heareth the prayer of the righteous"?
   a. Lord  b. Master  c. Savior  d. Father

10. What word starts this verse, Proverbs 16:18, "____________ goeth before destruction, and a haughty spirit before a fall"?
   a. Carelessness  b. Foolishness  c. Pride  d. Wickedness

# Picture Puzzle

Does the world ever seem big and confusing? There's a way to find help whenever you need it! To solve the puzzle, find each of the 6 squares below in the bigger picture. Then write down the top and side letters that go with that square (the top letter first, then the side letter). The first two letters have been done for you.








N A S P E Y E A

R V Y T Y D R L



P R __ __   __ __ __ __ __   __ __ __

**'I KNEW HE WOULD ANSWER MY PRAYER'… A CHILD LIKE TRUST IN GOD**

"Please let me see a frog tonight, in Jesus' name, amen." 4-year-old Michelle prayed.



A frog? - her mother mused.

A frog in the middle of the city??

"Well, dear, we'll just have to wait and see," she responded.

"God can do anything," Michelle announced. Leaving her daughter to fall asleep, her mother tiptoed downstairs.

A lump filled her throat as she pondered her daughter's prayer.

"I know it's a silly request, God. But, did You hear her? Do You hear me now?"

Just then her eyes fell on something that had moved on the floor.

Turning the overhead light on, she spied a small beady eyed brown frog, that had somehow hopped in from the garden outside.

"Quick", she shouted to her husband, "Wake Michelle up! she has to see this!!



God had miraculously answered Michelle's prayer.

But that's not the best part of the story. The best part is yet to come…

When dad brought a drowsy Michelle downstairs in his arms, Michelle held the frog, petted it, more sleepy than interested, and not the least bit surprised that her prayer had been answered.

"**I knew He would answer my prayer**," she said as she fell back in her father's arms again, and closed her eyes.

Children, we have a Great God who reminds us that **He is always listening to our prayers…**

**And we should not be surprised to receive miraculous answers to our prayers.**

***A Family That Prays Together Can Be an Unstoppable Force for Good, Bringing God's Answers to Impossible Situations. Children, remember to keep time daily for family Prayer!!***



**TEEN THOUGHT - WHY SHOULD I PRAY??**

**Q. Why should I pray if God already knows what I need?**



A. The Bible says in Matthew 6:8 – "Your Father knows what you need before you ask him", but the Bible also encourages us to "Pray without Ceasing", in 1 Thessalonians 5:17.

This seeming contradiction could question our need for prayer. So, why should we pray?

**i. Prayer positions us to receive what Grace wants to give.**

When we pray, we are not informing God of our needs, we are talking to God, putting ourselves in an attitude of prayer, acknowledging our dependence on God, and admitting that we need his help to resolve our needs.

**ii. Prayer is more about relationship, than it is about Request.**



When we pray to God, we focus on Him. We remind ourselves daily on 'Who is in-Charge', not just in our eternal life, but also in our daily life. Prayer is more than the gift; it is about the Giver of the gift.

**iii. Prayer is more about Listening to God, than it is about talking to God.**

Too often, our prayers are one-sided-we do all the talking! When we grow to listen to him, we will discover how to become partners with Him. He will guide us, lead us, towards fulfilling his work in our lives, and meeting all our needs.

So… let's get praying!!

Our Role model is **Jesus.** Many verses in the gospels tell us that Jesus went to a secluded place and prayed to his Father in heaven.

Matthew 26:36 says, "Then Jesus came with them to a place called Gethsemane, and said to His disciples, "Sit here while I go over there and pray."

## Jesus prayed to His Father in heaven.

Find 10 things that are different in the second picture.



## J. HUDSON TAYLOR: GOD'S MIGHTY MAN OF PRAYER – A MISSIONARY STORY



One day, a sailing boat to China, was slowly drifting near the shores to New Guinea.

Seeing the captain worried, a young Hudson Taylor asked what the matter was.

"A deep sea current is carrying us to the shores", the captain replied.

On the far shore of the island, cannibals could be seen rushing about and lighting fires in great glee.

"We have done everything that can be done."- The captain cried, "I don't know what else to do."

"No," responded Hudson, there is one thing we haven't done.

We haven't prayed yet! Let us ask the Lord to give us a breeze immediately", and he bowed his head in prayer.

"Nonsense! You cannot pray up a wind." – came the weary reply back.

"Never mind what you think," responded Hudson when he finished praying. "Let down the sail quickly."

No sooner had the main sail been let down, it was noticed that a breeze had indeed picked up.




In a few minutes they were sailing away from the dangerous shores, and away from the cannibals.

Hudson later wrote in his dairy…

"Thus God encouraged me, in my mission to China, **to bring every variety of need to Him *in prayer,* and *to expect that* He *would honor the name* of the Lord Jesus, and give the help which each emergency required."**

*"And whatsoever ye shall ask in my name, that will I do, that the Father may be glorified in the Son." John 14:13*

**James Hudson Taylor (21 May 1832 – 3 June 1905)**, was a British Protestant Christian missionary to China, and founder of the China Inland Mission (CIM).
Taylor spent 51 years in China.

The society that he began, was responsible for bringing over 800 missionaries to the country, who began 125 schools, and directly resulted in 18,000 Christian conversions in the country.

**Dear children,**

Hope you have read every article in the children's section. Let's see how well you remember them... Complete the sentences below...

1. The theme for the month of March is ________________________________.
2. The five fingers in the hand model prayer for children indicate - ____________ (thumb); ____________ (pointer); ______________ (middle); ______________(ring); and ______________ (pinky)
3. The principle author of the Book of Proverbs is _________________________.
4. Christian kids have someone who helps them to obey and follow God - the ______________________!
5. Proverbs 3:5,6 says ________________________________________________ ________________________________________________________________ ________________________________________________________________ ____________________________________________________________.
6. 4-year-old Michelle prayed for a __________. Did God answer her prayer? _____________(Yes/No)
7. Why should I pray if God already knows what I need?

   i. ___________________________________________________________
   ii. ___________________________________________________________
   iii. ___________________________________________________________
8. Our role model to pray is _________________.
9. Seeing the Captain distressed, Hudson responded that there was one thing they had not done yet. What had they not done yet? __________________________________________________________.
10. James Hudson Taylor spent ___________ years in China; founded a society that brought over ______________ missionaries; who began ______________ schools; and resulted in ________________ direct Christian conversions in China.

